# வகுப்பு - 7 - பருவம் - 3 - குடிமையியல்
## 2. ஊடகமும் ஜனநாயகமும்

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?

(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) செய்தித்தாள் (4) இணையதளம்

2. கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது ______.

(1) இதழ்கள் (2) அறிக்கைகள் (3) நாளிதழ் (4) வானொலி

3. உலகினை மக்களின் அருகாமையில் கொண்டு வந்த ஊடகம் ______.

(1) தட்டச்சு (2) தொலைபேசி

(3) தொலைக்காட்சி (4) இவற்றில் ஏதுமில்லை

4. வெகுஜன ஊடகம் என்பது ______.

(1) வானொலி (2) தொலைக்காட்சி

(3) 1 மற்றும் 2 (4) இவற்றில் ஏதுமில்லை

5. ஊடகம் ஏன் சுதந்திரமாக செயல்பட வேண்டும்?

(1) நிறைய பணம் ஈட்ட (2) நிறுவனத்தை ஊக்கப்படுத்த

(3) நடுநிலையான தகவலை தருவதற்கு (4) இவற்றில் ஏதுமில்லை

6. உலகத்தினைச் சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது ______

(1) கல்வி (2) வேளாண்மை (3) ஊடகம் (4) தட்டச்சு

7. ஒவ்வொரு தனிமனிதனும் ______ ஆகும்.

(1) ஊடகத்தின் வெளிப்பாடு (2) அறிவு

(3) ஆற்றல் (4) அச்சு ஊடகம்

8. அச்சு இயந்திரம் ______ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

(1) மார்கோனி (2) ஸ்மித்

LIVEWORKSHEETS

(3) ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் (4) பிரொஸ்ட்

9. நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு ______.

(1) ஊடகம் (2) கல்வி (3) வேளாண்மை (4) நெறிமுறை

10. இந்திய அரசின் வானொலி ஒலிபரப்பு நிறுவனம் ______.

(1) ஆகாசவாணி (2) F.M (எப்எம்) (3) கூகுள் (4) இணையம்

11. சமய கதைகள் மக்களிடம் கொண்டு செல்ல பயன்பட்ட கலை ______.

(1) பொதுக்கூட்டம் (2) நாடகம் (3) கருத்தரங்கு (4) கூத்து

12. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1400 (2) 1450 (3) 1453 (4) 1460

13. நவீன ஊடக முறையைக் குறிப்பது ______ ஆகும்.

(1) கூத்து (2) பொம்மலாட்டம்

(3) சொற்பொழிவு (4) நாடகம்

14. மக்களின் பல்கலைக்கழகமாக கருதப்படுவது ______ ஆகும்.

(1) அச்சு ஊடகம் (2) வானொலி (3) தொலைக்காட்சி (4) கடிதம்

15. ஊடகம் என்பது எந்த ஆங்கில வார்த்தையின் பன்மை?

(1) மீடியா (2) மீடியம் (3) ரேடியோ (4) ரேடியன்

16. தனிமனித தொடர்பு சாதனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ______.

(1) இணையம் (2) தொலைக்காட்சி

(3) வானொலி (4) மின்னஞ்சல்

17. தொலைக்காட்சி என்பது எந்த வகை ஊடக அமைப்பைச் சார்ந்தது?

(1) தொலைத் தொடர்பு (2) சமூக ஊடகம்

(3) அச்சு (4) குறுகிய தொடர்பு

LIVEWORKSHEETS

18. குறுகிய தொடர்பு ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ______.

(1) வானொலி (2) அஞ்சல் (3) மின்னஞ்சல் (4) தொலைநகல்

19. திரைப்படம் என்பது எந்த வகை ஊடகத்தைச் சார்ந்தது?

(1) குறுகிய தொடர்பு (2) வெகுஜன தொடர்பு

(3) தனிமனித தொடர்பு (4) தொலைத் தொடர்பு

20. பத்திரிக்கை எந்த வகை ஊடகத்தை சார்ந்தது?

(1) சமூக ஊடகம் (2) அச்சு ஊடகம்

(3) இணைய ஊடகம் (4) தொலைத்தொடர்பு ஊடகம்

21. இணைய வகை ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ______.

(1) வலைப்பதிவு (2) திரைப்படம் (3) செய்தித்தாள் (4) கீச்சகம்

22. சமூக ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ______.

(1) செய்தித்தாள் (2) புலனம் (3) கூகுள் (4) அஞ்சல்

23. எந்த ஆண்டு ஆகாசவானி என்ற வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது?

(1) 1936 (2) 1935 (3) 1937 (4) 1956

24. மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது ______.

(1) ஊடகம் (2) கல்வி (3) விவசாயம் (4) அரசியல்

25. சமூகத்தில் நடைபெறுகிற முக்கிய பிரச்சனைகளைப் பற்றிய கருத்தை தெரிவிக்கும் ஊடகம் ______.

(1) வெகுஜன ஊடகம் (2) அச்சு மற்றும் மின்னணு

(3) தொடர்பு ஊடகம் (4) சமூக ஊடகம்

26. வாழ்க்கையை வாழ தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு ______.

(1) நெறிமுறை (2) கல்வி (3) ஊடகம் (4) தொலைக்காட்சி

LIVEWORKSHEETS

27. ஜனநாயகத்தின் முதுகெலும்பு ______.

(1) இயற்கைவளம் (2) ஊடகம் (3) வாகனங்கள் (4) தாதுவளங்கள்

28. டெமோஸ் என்பது ______ சொல்

(1) லத்தீன் (2) அரேபிய (3) கிரேக்க (4) மீடியா

29. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படும் ஊடகம்

(1) வெகுஜனம் (2) உள்ளூர்

(3) தொலைத் தொடர்பு (4) இணையம்

30. படவரி என்பது எந்த ஊடகத்தைச் சார்ந்தது?

(1) தொலைத்தொடர்பு (2) குறுகிய தொடர்பு

(3) அச்சு ஊடகம் (4) சமூக ஊடகம்

31. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக

(i) குறு அளவிலான ஊடகம் - a. கூகுள் இணையம்

(ii) அச்சு ஊடகம் - b. சுவரொட்டிகள்

(iii) இணைய ஊடகம் - c. திரைப்படம்

(iv) ஒலிபரப்பு ஊடகம் - d. கருத்தரங்கு

(1) (i) - d (ii) - b (iii) - a (iv) - c (2) (i) - d (ii) - b (iii) - c (iv) - a

(3) (i) - a (ii) - d (iii) - b (iv) - c (4) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

32. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

(i) தனிமனித தொடர்பு - a. வலைப்பதிவு

(ii) வெகுஜன தொடர்பு - b. முகநூல்

(iii) சமூக ஊடகம் - c. வானொலி

(iv) இணைய ஊடகம் - d. மின்னஞ்சல்

(1) (i) - c (ii) - b (iii) - d (iv) - a (2) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

LIVEWORKSHEETS

(3) (i) - d (ii) - b (iii) - c (iv) - a

(4) (i) - b (ii) - d (iii) - c (iv) - a

33. பொருத்துக

(i) திரைப்படம் - a. நடுநிலைத்தன்மை

(ii) தொலைக்காட்சி - b. சமூகப் பிரச்சனை

(iii) வெகுஜன ஊடகம் - c. வட்டார மக்கள்

(iv) உள்ளூர் ஊடகம் - d. பன்னாட்டுச் செய்தி

(1) (i) - d (ii) - b (iii) - c (iv) - a

(2) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

(3) i) - b (ii) - d (iii) - c (iv) - a

(4) (i) - b (ii) - d (iii) - a (iv) - c

34. பொருந்தாத ஒன்றைக் கண்டறி.

(1) செய்தித்தாள்கள்

(2) அறிக்கைகள்

(3) கீச்சகம்

(4) சுவரொட்டிகள்

35. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானவை எவை?

(அ) ஊடகம் என்பது பொதுவாக ஒருவருக்கொருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது

(ஆ) ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்த நிறுவனம்

(இ) ஊடகம் மக்களிடம் பொதுக்கருத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது

(ஈ) ஊடகத்திற்கு எந்த பொறுப்பும் கிடையாது

(1) அ, ஆ மற்றும் இ சரி

(2) அ, ஆ மற்றும் ஈ சரி

(3) ஆ, இ மற்றும் ஈ சரி

(4) அ, ஆ மற்றும் ஈ சரி

LIVEWORKSHEETS